## இணைப்பு I.

(295 ஆம் பக்கத்தில் 198*ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

தகுதியுள்ள ஆலோசகர்களைக் கொண்டு பின்வருபவை குறித்துப் பரிசீலிக்குமாறு வேளாண்மைத் தொழிற்கழகத்தைக் கேட்டுக் கொள்ளலாமென்று வேளாண்மைத் துறை அமைச்சர் அறையில் 6—11—73 அன்று நடைபெற்ற மாநில அளவிலான கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

(1) வெல்லத்தைச் சர்க்கரையாக மாற்றுவதால் கிட்டும் ஆதாயம்.

(2) கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து எரிசாராயம் தயாரிப்பதால் ஏற்படும் ஆதாயம்.

(3) எரிசாராயத்தை மோட்டார் எரிபொருளான பெட்ரோலாக மாற்றுவதால் ஏற்படும் ஆதாயம்.

பெருமளவிலான தொழில் நுட்ப சாத்தியக் கூறுகளையும், பெட்ரோல் கலந்த "எதில் ஆல்காஹால்" கலவையை ஆட்டோ மொபைல் இயந்திரங் களில் பயன்படுத்துவதையும் (இதன் மீது ஆயத்தீர்வை விதிப்பதினின்றும் மாநில அரசு விலக்கப்படுமாதலால்) இதனால் ஏற்படக் கூடிய செலவையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று தொழில் துறை தெரிவித்தது. சில ஆண்டுகளுக்கு முன்னர் சுமார் 30 சதவீத அளவுக்குப் பெட்ரோலுடன் எரிசாராயம் சேர்க்கப்பட்டது. இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் அல்லது அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி உதவியுடன் இது குறித்து ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படலாம் எனவும் கூறப்பட்டது. விசைப் பொறி சாராயத்தை மோட்டார் எண்ணெயாக பயன்படுத்துவதி லுள்ள ஆதாயங்கள் பற்றி விவாதிக்க, தலைமைச் செயலகத்தில், 23–2–74-ல் நடைபெற்ற கூட்டத்தில் மோட்டார் எண்ணெயாக விசைப்பொறி சாராயத்தை அதாவது பெட்ரோலை, பயன்படுத்துவதிலுள்ள ஆதாயங்களைக் குறித்த புள்ளி விவரங்களையும், தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு கூட்டமைப்பு சேகரித்து அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இதன்படி கிண்டி பொறியியல் கல்லூரியிலும், சென்னை, புதுடெல்லி இந்திய தொழில் நுட்ப நிறுவனங்களிலும், விரிவான சோதனைகள் நடத்தப்பட்டன. திருவாளர்கள் கூப்பர் என்ஜினியரிங் ஒர்க்ஸ், சதாரா, மகாராஷ்டிரா மாநிலம், சென்னை என்பீல்டு இண்டியா நிறுவனத்தைச் சேர்ந்த வேளாண்மைப் பொறியியல் பிரிவு போன்ற சில நிறுவனங்களும் சோதனைகள் நடத்தியுள்ளன. விசைப் பொறி சாராயத்தை எரிப்பொரு ளாக பயன்படுத்துவதற்கு என்றே பொறிகளை உருவாக்கும் அளவுக்கு

* Circulated to all M.L.Cs. on 22nd March 1975.

திருவாளர்கள் கூப்பர்ஸ் எஞ்ஜினீயரிங் ஒர்க்ஸ் போன்ற நிறுவனங்கள் முயற்சி எடுத்துள்ளன. இந்திய தொழில் நுட்ப நிறுவனமும், கூடுதலாக சில இணைப்புக் கருவிகளை உருவாக்கியுள்ளன. இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் டீசல் பொறிகள், 30 சதவீதம் டீசல் எண்ணெயுடனும் எஞ்சிய சதவீதம் சாராயத்துடனும் ஓட்டப்படலாம். ஆக்ரோ என்ஜினியரிங் நிறுவனமும் சில விரிவான சோதனைகள் நடத்தி, சாராயத்தைக் கொண்டு தக்கபடி பொறிகளை ஓட்டும் வகையில் சில கூடுதல் கருவிகளையும் உருவாக்கியுள்ளது.

சுருக்கமாகக் கூறின், டீசல் எண்ணெய் எந்திரங்களை ஓட்டுவதற்கு எரி சாராயத்தைப் பயன்படுத்த சாத்தியக் கூறுகள் உள்ளன.

## இணைப்பு II.

[302 ம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## மருத்துவத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே :

"மருத்துவப் பணிகள்" என்ற தலைப்பின்கீழ் அரசுக் கொள்கையின் முக்கிய கூறுகளை மேலவையின் முன் வைக்க நான் விழைகிறேன்.

வளங்கெழு அரசின் தலையாய குறிக்கோள்களில் ஒன்று, மக்களுக்குப் போதுமான மருத்துவ வசதி அளிப்பதாகும். ஒரு நாட்டின் வளர்ச்சியும் வளமையும் அந்நாட்டுக் குடிமக்களுடைய சிறந்த நல்வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது. நகரங்களிலும் கிராமங்களிலும் வாழுகின்ற மக்களுக்கு, உடனடியாக மருத்துவப் பணிவசதிகள் கிடைக்கச் செய்யும்பொருட்டு இப்பணி வசதிகளைப் பெருக்கி, அது நாளது வரையிலான முன்னேற்றங்களைக் கொண்டதாகவும், மிகத்திறமையுடன் பணியாற்றுவதாகவும் அமைக்கும் பொருட்டு நாம் பெருமுயற்சிகள் எடுத்து வந்துள்ளோம்.

அடுத்தடுத்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் மருத்துவம், மக்கள் நல்வாழ்வு ஆகியவற்றுக்குச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS